செங்கோட்டை நகர்மன்றத்தின்
அவசரக் கூட்டம் 15.10.2020 அன்று மற்பகல்
4.00 மணிக்கு நடைபெற்றதன் கூட்ட
நடவடிக்கைகள்

தலைமை திரு. ந. சோ. கண்ணன், பி.இ
தனி அலுவலர் அவர்கள்.

மன்றப்பொருள்.- 12 1.10.20

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்29280/2020/WB, நாள்.- 25.09.2020 ன் படி இந்நகராட்சிக்கான UTIS (Urban Tree Information System payment of Bandwidth cost of 6 months periods) தரைதள இணையதள சேவைக்கட்டணம் 30.09.2019 வரை SFC Grant பிடித்தம் செய்யப்பட்டு விட்டது. தற்போது 01.10.2019 முதல் 31.12.2019 வரை ரூ. 48295/– மற்றும் 01.01.2020 முதல் 31.03.2020 வரை ரூ. 48295/– மொத்தம் 96590/– பி.எஸ்.என்.எல் நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டதன் படி மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.-

1. மேற்படி தொகையினை செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கேட்புத் தொகை ரூ. 96,590/– வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்.- 11

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் டம்பர் பிளேசர் வாகனம் எண். TN76 P8356 ஒன்றும், டிப்பர் வாகனம் எண்TN72 X9398 ஒன்றும் நகராட்சியில் இருக்கிறது. இந்நகராட்சியில் குப்பைத் தொட்டி இல்லாத நகரமாக 01.10.2019–ம் தேதி அறிவிக்கப்பட்டு, நகரில் இருந்த டம்பர் பின் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டதால், டம்பர் பிளேசர் வாகனம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. டிப்பர் வாகனம் எண். TN72 X9398 வாங்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு விட்டதால், மேற்படி வாகனம் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொது சுகாதார பணி பாதிக்கப்படுகிறது. புதிய டிப்பர் வாகனம் வாங்கும் பட்சத்தில் அதிக செலவினம் ஏற்பட வாய்ப்புள்ளதால், ஏற்கனவே பயன்பாடு இல்லாமல் உள்ள டம்பர் பிளேசர் வாகனம் எண். TN76 P8356 ஐ டிப்பர் வாகனமாக மாற்றம் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு.-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்.. 12

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 காலாங்கரை பகுதிக்கு குடிநீர் செல்லும் குடிநீர் விநியோக குழாய் காந்தி ரோட்டில் காந்தி சிலை முன்புறத்திலிருந்து வாஞ்சி நாதன் சிலை வரைக்கு அடிக்கடி குழாய் உடைந்து தண்ணீர் வீணாகி செல்வதுடன் காலாங்கரை பகுதிக்கு தண்ணீர் சீராக விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, பொது மக்களிடமிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்கள் அலுவலகத்திலிருந்தும் தொலைபேசி வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்படி பழுதினை 300 மீட்டருக்கு குழாய்கள் மற்றும் பைப் உதிரி சாதனங்கள் மாற்றியும் பழுது நீக்கவும், ரூ. 5.77 லட்சத்திற்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மேற்படி பணியினை குடிநீரின் அவசிய அவசரம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்.. 13

செங்கோட்டை நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் தாமிரபரணி கூட்டு குடிநீர்த்திட்டத்தின் மூலமாகவும், உள்ளூர் குடிநீர் திட்டமான சசிவோத்தமா குடிநீர் திட்டம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தாமிரபரணி கூட்டு குடிநீர் த்திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் குடிநீரினாது சரி விகித அளவில் இயந்திரம் குளோரினேஷன் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீரான விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சசிவோத்தமா குடிநீர் திட்டத்தின் வழங்கப்படும் குடிநீரையும் சரி விகித அளவில் குளோரினேஷன் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீராக வழங்குவதற்கு, ஏதுவாக குளோரினேஷன் இயந்திரம் பொருத்தவும் அதற்காகும் செலவினம் ரூ. 2.50 லட்சத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்.. 14

செங்கோட்டை நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019 கீழ் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். நக.எண்.அ8/4193/2018 நாள்.14.07.2019 ன் படி காலாங்கரை பகுதியிலுள்ள சிதிலமடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கு, ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தனி அலுவலர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி தொடங்க பெறும் நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் நக.எண்.அ8/4193.2018, நாள். 31.12.2019ல் மேற்படி பணியினை ரத்து செய்துள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

மன்றம் பதிவு செய்யலாம்

283 26

மன்றப்பொருள்..

மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை எண். அ8/5044.2019, நாள் 28.09.2020ன் படி. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 ன் கீழ் செங்கோட்டை நகராட்சி காலாங்கரை EB ஆபீஸ் அருகில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 15.10.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி காலாங்கரை EB ஆபீஸ் அருகில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணிக்கு | ரூ 9.70 லட்சம் | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | மதிப்பீட்டை விட 0.58% கூடுதல் |

அலுவலககுறிப்பு.

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த பட்ச விலைவிகிதமாக மதிப்பீட்டை விட 0.07% குறைவாக வழங்கியுள்ள திரு.தா.ஆபேல் ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.